இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

பட்டப்பின் கல்வி டிப்ளோமா

இறுதிப் பரீட்சை 2004/2005 - இரண்டாம் அரையாண்டு

ESP 1109 – சிறுவர் உரிமைகள்

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

239

திகதி: 29.07.2006 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

பகுதி இல் I உள்ள எல்லா வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. பிள்ளையின் நலன் தொடர்பாக 1930களிலும் 1940களிலும் இயற்றப்பட்ட மூன்று சட்டங்களின் பெயர்களைத் தருக.

2. இலங்கை நீதிமன்றங்கள் பிள்ளையின் உயரிய நலன்களைத் தீர்மானிக்கையில் கருத்திற் கொள்ள வேண்டிய மூன்று விடயங்களைப் பட்டியற்படுத்துக.

3. பிள்ளை உயிர் பிழைத்து வாழ்வதற்கு அச்சுறுத்தலாக அமைவனவாக ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட ஐந்து வீட்டு ஆபத்துக்காரணிகளைப் பட்டியற்படுத்துக.

4. ‘பிள்ளையின் வளர்ச்சியும் விருத்தியும்’ என்ற எண்ணக்கருவினைச் சுருக்கமாக விளக்குக.

5. இலங்கையில் அதிகம் காணப்படும் ஐந்து வகை சிறுவர் துஷ்பிரயோகங்களைப் பட்டியற்படுத்துக.

6. சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் 12ஆம் 13ஆம் உட்பிரிவுகளில் கூறப்பட்டபடி சிறுவர்களின் பங்கேற்கும் உரிமைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

7. சிறுவர் உரிமைகளை அமுல்படுத்துவதை உறுதிப்படுத்த சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் பிரேரிக்கப்பட்டுள்ள மூன்று நடைமுறைகளைக் குறிப்பிடுக.

8. இலங்கையில் சிறுவர் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களில் பயன்படுத்தக் கூடிய சிறுவர் உரிமைகள் பற்றிய தகவல் பெறும் பிரதான நான்கு மூலங்களைப் பட்டியற்படுத்துக.

(5 x 8 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. (அ) பிள்ளையின் உயிர் வாழ்வதற்கான உரிமை தொடர்பாக சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கிணங்க அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இரண்டு நிலைமைகளைக் குறிப்பிடுக.
(4 புள்ளிகள்)

(ஆ) பின்வருவன தொடர்பாக பிள்ளைகளின் உயிர்வாழ்வதற்கான உரிமையில் தாக்கம் செலுத்தும் காரணிகளை ஆராய்க.

(i) தாயின் ஆரோக்கியமும் போஷாக்கு நிலைமையும் (8 புள்ளிகள்)

(ii) பிள்ளையின் ஆரோக்கியமும் போஷாக்கு நிலைமையும்
(8 புள்ளிகள்)

10. 'சிறுவர் விருத்தி என்பது ஆளுமை விருத்தி உட்பட விருத்தியின் பல அம்சங்களை உள்ளடக்குகின்றது'.

(அ) 'ஆளுமை விருத்தி' என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.
(5 புள்ளிகள்)

(ஆ) ஒரு பிள்ளையின் ஆளுமை விருத்தித் தேவையை நிறைவேற்றுவதற்கு பாடசாலை ஒன்று ஆற்றவேண்டிய ஐந்து முக்கிய கடமைகளைப் பரிசீலிக்க.
(15 புள்ளிகள்)

11. (அ) கடின(விசேட) சூழ்நிலைகளுக்குட்பட்ட சிறுவர்கள் பற்றிச் சுருக்கமாக விபரிக்க
(5 புள்ளிகள்)

(ஆ) விசேட தேவைகளைக் கொண்ட சிறுவர்களுக்கு பராமரிப்பும் புனர்வாழ்வளிப்பதிலும் குடும்பத்தின் பிரதான பொறுப்புகளைக் குறிப்பிடுக
(15 புள்ளிகள்)

12. (அ) இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு இட்டுச்செல்லும் மூன்று முக்கிய காரணிகளைக் குறிப்பிடுக.
(9 புள்ளிகள்)

(ஆ) இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்தினைத் தடுப்பதற்கு இருக்கும் மூன்று சட்ட நடைமுறைகளைக் குறிப்பிடுக.
(6 புள்ளிகள்)

(இ) இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகத்தினை எம்மால் பூரணமாகத் தடுக்க முடியாமைக்கான மூன்று காரணங்களைத் தருக.
(5 புள்ளிகள்)

13. (அ) சிறுவர் உரிமைகள் அமுலாக்கல் தொடர்பாக சிறுவர் உரிமைகள் சமவாயத்தில் இடம்பெறும் மூன்று பிரதான ஏற்பாடுகளைக் குறிப்பிடுக.

(6 புள்ளிகள்)

(ஆ) சிறுவர் உரிமைகள் தொடர்பான பல்வேறு நடைமுறைகளும் அமுல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஐந்து பிரதான நடவடிக்கைகளை விபரிக்க.

(14 புள்ளிகள்)

14. பின் வருவனவற்றுள் எவையேனும் மூன்றினுக்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(அ) சிறுவர் உரிமைகளை நிர்ணயிக்கும் அடிப்படைக் கோட்பாடுகள்.

(ஆ) பாடசாலைச் சூழலில் பிள்ளைகளின் பங்கேற்கும் உரிமைகள்

(இ) பிள்ளைகளின் சமூகவிருத்தி

(ஈ) சிறுவர் உரிமைகள் பற்றிய தகவல்களை ஏற்போராகவும் வழங்குபவராகவும் ஆசிரியர்களது வகிபங்கு.

(உ) சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை - இலங்கை

(20 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)